**சுருக்கம்**

நிலம் – குத்தகை– காஞ்சிபுரம் மாவட்டம் – திருப்போரூர் வட்டம், திருவிடந்தை மற்றும் 9 கிராமங்களில், 3010.48 ஏக்கர் நிலத்தினை உப்பு உற்பத்தி செய்ய தமிழ்நாடு உப்புக்கழகத்திற்கு குத்தகைக்கு வழங்குதல் ஆணை – வெளியிடப்படுகிறது.

---

**(வருவாய் மற்றும் பே.மே. (நி.மு.6(1)த் துறை)**

**அரசாணை (நிலை) எண்.291**

நாள்: 10.08.2018
விளம்வி வருடம், ஆடி 25
திருவள்ளுவர் ஆண்டு 2049

படிக்கவும்:–

1. அரசாணை (நிலை) எண்.1077, வருவாய் துறை நாள் 22.06.1982.
2. அரசாணை (நிலை) எண்.410, வருவாய் துறை, நாள் 13.07.2007.
3. மாவட்ட ஆட்சித் தலைவர், காஞ்சிபுரம் கடித எண்.2443/2014/ஆ1, நாள் 19.06.2014.
4. கூடுதல் தலைமைச் செயலாளர் / நில நிர்வாக ஆணையர், கடித எண். இ2/21212/2011, நாள் 17.09.2014 மற்றும் 19.04.2018

••••••

**ஆணை:**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம் (தற்போது திருப்போரூர் வட்டம்) திருவிடந்தை மற்றும் 9 கிராமங்களில் 3611.69 ஏக்கர் நிலம் திருவாளர்கள் ஸ்ரீமாருதி மரைன் இண்டஸ்டிரிஸ் நிறுவனத்திற்கு 25 ஆண்டுகளுக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டது.

2. மேற்படி குத்தகைக் காலம் 17.03.1997–உடன் முடிவுற்றதை தொடர்ந்து, மேலே இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையில் மேலும் 20 ஆண்டுகளுக்கு குத்தகை நீட்டிப்பு கோரிய திருவாளர்கள் ஸ்ரீமாருதி மெரைன் இண்ட்டிரீஸ் நிறுவனத்தின் கோரிக்கையினை நிராகரித்து, மேற்படி 3611.69 ஏக்கர் நிலத்தினை அரசின் வசம் மீள எடுக்க ஆணை வெளியிடப்பட்டது.

3. இந்நேர்வு தொடர்பாக காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் பின்வருமாறு தெரிவித்துள்ளார்:–

(i) மேற்படி அரசாணை (நிலை) எண்.410, வருவாய்த் துறை, நாள் 13.07.2007–ல் வழங்கப்பட்ட ஆணையினை எதிர்த்து ஸ்ரீமாருதி மெரைன் இண்டஸ்டிரீஸ் லிமிடெட், புதுடெல்லி உச்சநீதிமன்றத்தில் தொடுத்த Special Leave to Appeal (Civil) No(s) 17908/2008 Judgement, dated 22.07.2008 in W.P.No.27071/2007 of the High Court Madras, dated 18.03.2010–ன் படி 31.07.2010–க்குள் வழக்கிடை புலத்தினை காலிசெய்ய உத்திரவிடப்பட்டது. நீதிமன்ற ஆணையின்படி 3611.69 ஏக்கர் நிலம் 31.07.2010–ல்